[7th April 1958

SRI M. JAGANNATHAN : How does the Hon. Minister define a ' swayamariyathai marriage '?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சுயமரியாதைக் கல்யாணம் என்பது, சாதாரணமான சம்பிரதாயச் சடங்குகள் இல்லாமல் நடத்தப்படும் கல்யாணம் ஆகும். ஒருக்கால் அதில் பிரசங்கம் செய்வதும் சேர்ந்திருக்கிறதோ, என்னமோ. எனக்குத் தெரியாது.

Remission of Land Revenue

* 48 *S.N.Q.*--SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received recently mahazars for the grant of remission of land revenue in Villupuram, Tirukoilur and Cuddalore taluks owing to the failure of water-supply from Tirukoilur Anicut and Ellis choultry ayacut; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir. Certain representations regarding grant of land revenue remission were received from the ryots of Cuddalore and Villupuram taluks.

(*b*) They have been transferred to the Collector of South Arcot for necessary action. Under the provisions of Board's Standing Orders, the Collector himself is competent to sanction wet remission wherever necessary in cases where crops have failed due to inadequate supply of water from Government irrigation sources.

SRI A. GOVINDASWAMY : நஞ்சைத் தீர்வையைத் தள்ளிவிட்டு, புஞ்சைத் தீர்வையை வாங்கினால் விவசாயிகளுக்கு போதுமான நிவாரணம் கிடைக்காது. ஆகவே முழுத் தீர்வையையும்—நஞ்சை, புஞ்சை இரண்டையும்—தள்ளுவதற்கு அரசாங்கம் உத்திரவு போடுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கலெக்டர், தமக்குக் கீழே இருக்கும் அதிகாரிகளுக்கு "அதை ' அஜ்மாஷ் ' பண்ணவேண்டும்" என்று உத்திரவு போட்டிருக்கிறார். ரிப்போர்ட் வந்தபிறகு, என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யலாம்.

SRI A. GOVINDASAMY : அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் பல கஷ்டங்களினால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால், அந்தப் பகுதியில் ' புல் ரெமிஷன் ' (முழு வஜா) கொடுக்கப்படுமா ? அதற்கான உத்தரவை அரசாங்கம் போடுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அரசாங்கம் எப்படிப்பட்ட உத்தரவைப் போடும் என்று சொல்வதற்கில்லை. அந்த ரிப்போர்ட் வந்த பிறகு அதைப் பார்த்து, என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யலாம்.

Irrigation wells

* 550 *Q.*—SRI G. G. GURUMOORTHI (on behalf of Sri P. G. Manickam) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of agriculturists to whom loans were given under the Loan Subsidy Scheme for digging the irrigation wells in 1957 in the Coimbatore District; and

7th April 1958]

(*b*) among the wells dug (i) how many completed, and (ii) how many not yet completed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The well subsidy scheme was not in operation in the State during 1957. Subsidy loans were granted to 4,685 ryots in Coimbatore district under the Scheme when it was in operation from 1947–48 to 1951–52.

(*b*) (i) 3,339.

(ii) 1,346.

SRI M. S. SELVARAJAN: பாசனக் கிணறுகள் வெட்டுவதற்காகக் கொடுக்கப்படும் மானியம் எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அந்த மானியம் கொடுக்கும் திட்டம் இப்போது நிறுத்தப்பட்டு விட்டது என்று நான் சொன்னேன். **1951–52** வரையில்தான் அந்தத் திட்டம் அமுலில் இருந்தது. இப்போது, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகச் செலவழிக்கப்படும் பணத்தில் ஒரு பகுதி கிணறு வெட்டுவதற்குக் கொடுக்கப்படுகிறது ; வெட்டப்படக்கூடிய கிணறு உணவு உற்பத்திப் பெருக்கத்திற்குப் பயன்படக்கூடுமானால், அதற்கு இந்தப் பணம் கொடுக்கப்படுகிறது.

SRI A. R. SUBBIAH MUDALIAR: உணவுப் பொருள் உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின்கீழ், கிணறுகள் வெட்டுவதற்காகக் கடன் கொடுப்பதற்காக 'லோன் ஸப்ஸிடி ஸ்கீம்'-ஐ அமல் நடத்த சர்க்கார் உத்தேசிக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது கடன் கொடுக்கப்படுகிறது. எல்லாவற்றிற்காகவும் கடன்கள் கொடுக்கப்படுவது போல் கிணறுகள் வெட்டவும் கடன்கள் கொடுக்கப்படும்.

MR. SPEAKER: I think we can take up Question Nos. 568, 569 and 570 together.

SRI K. VINAYAKAM: Sir, I think they are different questions altogether.

MR. SPEAKER: They relate to the same subject. So, I think the Hon. Minister may answer the questions together as it will save time.

Prohibition offences

* 568 *Q.*—SRI K. B. S. MANI (on behalf of Sri P. G. Manickam): Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the amount spent for the enforcement of Prohibition in 1957;

(*b*) the number of persons in each district who have committed offences in contravention of the Madras Prohibition Act and the nature of such offences;

(*c*) the number of persons sentenced to imprisonment and the number fined; and

(*d*) the amount realised by way of fine?